தமிழ்நாடு அரசு

இந்து சமய அறநிலையத்துறை

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம்

அருள்தரும் ஸ்ரீ சிவகாமிஅம்பாள் சமேத ஸ்ரீ பதஞ்சலி வியாக்ரபாதீஸ்வரர் திருக்கோவில்

தென்சிதம்பரம் – செய்துங்கநல்லூர்

அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்

நாள் : 08.06.2025, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 7:15 மணிக்கு மேல் 8:30 மணிக்குள்

உ

சிவமயம்

அருள்தரும் ஸ்ரீ சிவகாமிஅம்பாள் சமேத ஸ்ரீ பதஞ்சலி வியாக்ரபாதீஸ்வரர் திருக்கோவில்

தென்சிதம்பரம் – செய்துங்கநல்லூர்

செல்வம் வழங்கும் குபேர ஸ்தலம்

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே

முருகன் துதி

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைகால் எப்பொழுதும்
நம்பியே கை தொழுவேன் நான்.

சிவன் துதி

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்புர வியோம மாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

அம்பாள் துதி

தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

பதஞ்சலி பிறப்பு

அத்ரி முனிவருக்கும் அனுசியா தேவிக்கும் பிறந்த குழந்தைகளில் பதஞ்சலி முனிவர் மிகவும் விஷேசமானவர். இவர்தான் யோகத்தின் தந்தை எனப்போற்றப்படுபவர். பதஞ்சலி ஆதிசேஷரின் அவதாரம் ஆவார். ஒரு சமயம் தாருகாவனத்தில் சிவனின் ஆனந்த தாண்டவத்தில் விஷ்ணுபகவான் ஆதிசேஷனின்மேல் அனந்த சயனத்தில் இருக்கும்போது எப்பொழுதும் இல்லாத அளவிற்கு ஆனந்தத்தோடு கூடிய அமுத்தம்ஏற்பட்டது. இந்த அமுத்தத்தை ஆதிசேஷனால் தாங்க முடியாத ஆனந்தத்தில் மகாவிஷ்ணுவிடம் வினவ மகாவிஷ்ணு நான் தில்லை அமபலவானனின் திருநடன காட்சியைக் கண்டேன். ஆனந்த தாண்டவத்தை ரசித்துக் கொண்டிருந்தேன். சொல்வதற்கு அறியாத ஆனந்தம் என்றுகூறினார். அதைக்கேட்ட ஆதிசேஷன் மனதிற்குள் அந்த ஆனந்த தாண்டவத்தை ரசிக்க வேண்டும் என்று நினைக்க, அது மகாவிஷ்ணுவிற்கு தெரியவந்தது. உடனே நடன காட்சியை பார்த்து ரசிக்க விரும்புகிறாயா என்று கேட்க ஆம் என்று ஆதிசேஷன் கூற, அப்படி எனறால் நீ பூலோகத் தில் சென்றுதான் பார்க்கவேண்டும். எனவே நீ சென்று பார்த்துவா என்று கூறினார். அதன் பேரில் ஆதிசேஷன் பதஞ்சலி முனிவராக அத்ரி மகரிஷிக்கும் அனுசுயா தேவிக்கும் இரண்டாவது மகனாக ஆகாய மார்க்கமாக அனுசுயாதேவியின் மேல் விழுந்து நழுவி பாதத்தில் விழுந்தார். எனவே இவர் பதஞ்சலி என்று அழைக்கப்பெற்றார். இதைப்போன்று வசிஷ்ட மகரிஷியின் உறவினரான வியாக்ரபாத முனிவர் அதன்பின்னர் தில்லைவனத்தை பராமரித்து அங்குள்ள மூலவரை தினந்தோறும் வழிபட்டு வந்தார் சிவபெருமானுக்கு மாசற்ற மலர்களை வைத்து பூஜை செய்து வரவேண்டும் என்பது அவருடைய விருப்பம். எனவே அவர் தேனீக்கள் பூவிலுள்ள தேன்களை உறிஞ்சும் முன் மலரைப்பறித்து இறைவனுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று விரும்பியதன் காரணமாக சிவபெருமானிடம் தவமிருந்து கேட்க அதன காரணமாக சிவபெருமான் அவருக்கு புலி கால், கை மறறும் புலி கண்ணையும் கொடுத்து நீ விடியும் முன் மலர்களை பறித்து உனது தவத்தை நிறைவு செய்வாயாக என்று அருளினார். இன்றும் வியாக்ரபாதர் இங்கு சூட்சுமமான முறையில் அதகாலையில் வந்து தீருகாவில் நந்தவனத்தில் நந்தியாவட்டை என்கிற மலர் வியாக்ரபாத முனிவரின் வேண்டுதலுக்கு இணங்க வெகு நேரம் செடியில் மலராமல் மொட்டாகவே இருந்து பின் அதை பறித்து இறைவனுக்கு சமர்ப்பித்த பின் மலரும் அதிசயம் இன்றளவும் நடைபெற்று வருகிறது.

தென்தில்லையானது சதுர்வேதிமங்கலம் என்ற செய்துங்கநல்லூர்

முன்னொரு காலத்தில் இப்பகுதி அடர்ந்த வனமாக இருந்தது. தாமிரபரணி தற்போது ஓடுவதைவிட சற்று மேற்காக ஓடியது. தாமிரபரணி கரையில் முறப்பநாட்டை தலைநகராக கொண்டு ஜெயதுங்க மன்னன் ஆட்சி செய்து வந்தார். இதன் அருகே உள்ள செய்துங்கநல்லூர் என்னும் ஊர் முற்காலத்தில் சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டது. ஜெயதுங்கன் என்றால் வெற்றி திருமகன் என்று பொருள். இவர் எங்கே சென்றாலும் வெற்றிதான் கிட்டும். ஜெதுங்க மன்னன் வேட்டையாட தாமிரபரணி கரையில் உள்ள கழையாற்றுப்பகுதிக்கு தன் படைகளுடன் வந்தார். அங்கே வியாக்ரபாத முனிவர் மற்றும் பதஞ்சலி முனிவர்கள் தவம் செய்து கொண்டிருந்தனர். அதனருகில் தென் சிவகங்கை குளக்கரை அருகில் ஒரு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வணங்கி வந்ததை பார்த்தார், அவர்கள் இருந்த இடத் திற்கு ராஜா வந்தபோது ஒரு அதிர்வை உணர்ந்தார். அங்கு திருசங்கு ஒன்று ஆற்று நீரில் எதிர்த்து நின்று பஞ்சாட்சரம் மந்திரமான ஓம் நமச்சிவாய என்னும் மந்திரத்தை ஓதிக்கொண்டு இருந்தது. சிவபெருமான் தன்சடையில் உள்ள கங்கையை தீர்த்தமாக அளித்தார். அந்த ஓடையானது இன்றளவும் தாமிரபரணி வரை சென்றுகொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் சிறந்த சிவபக்தனான ஜெயதுங்க மன்னன் மகா முனிவர்களை பார்த்தவுடன் கைகூப்பி வணங்கி நின்றார். அச்சமயம் சிவபெருமானும் தோன்றி காட்சி கொடுத்து ஜெயதுங்க மகாராஜாவிடம் இங்கு ரிஷிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத் திருமேனியானது எனது ஜோதிர்லிங்க மாகும். இது பதஞ்சலி மற்றும் வியாக்ரபாத முனிவர்கள் வேண்டி கேட்டதன்பேரில் இது ஸ்தூல லிங்கமாக காட்சியளிக்கிறது.

இந்த லிங்கமானது காந்த ஈர்ப்பு சக்தி அதிகமாக இருக்கும். இங்கு காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யத்தை விட்டொழித்து தியானம் செய்கிறவர்களுக்கு உடனே எனது காட்சியை அருள்வேன் என்று கூறி ஒரு ஆலயம்கட்டி வழிபாடுக்கு வழி செய்யுமாறும் இது தென்தில்லை ஆகும் என்றும் உத்தரவிட்டார். அதன் பினனர் மகா முனிவர்கள் இருவரும் சிதம்பரம் சென்று இறைவனுடைய திருநடன காட்சியை கண்டு களித்தனர். மேலும் நம்முடைய திருக்கோவில் மூலவரை பதஞ்சலி வியாக்ரபாதீஸ்வரரை கழையாற்றுநாதர், திருவரங்கேஸ்வரர், திருப்புலி ஈஸ்வரமுடையார் போன்ற பெயர்களுடன் தாயார் பெரியநாச்சியார் மற்றும் சிவகாமி அம்மாள் என்று அழைக்கப்பட்டு இக்காலம் வரை இருந்து வருகிறது. இக்கோவிலைப் பொருத்தவரை யோக தட்சணாமூர்த்தி விஷேகமாக கருதப்படுகிறது. ஆசியாவிலேயே இந்த அமைப்பு எங்கும் கிடையாது. திருநீறு பூசும் பழக்கத்தை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுங்கள்.

திரு.மா.அன்புமணி அவர்கள்
இணை ஆணையர், இந்துசமய அறநிலையத்துறை

அறங்காவலர் :
சிவஸ்ரீ மே.மாரியப்பன் அவர்கள்
செல் : 80563 32877

ஆய்வாளர் :
திரு.முருகன் அவர்கள்
திருவைகுண்டம்

ஆய்வாளர் :
திரு.நம்பி அவர்கள்
ஏரல்

செயல் அலுவலர் :
திரு.கோகுல மணிகண்டன் அவர்கள்

உ

சிவமயம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின்

சீர்மிகு நல்லாட்சியில் நடைபெறும் குடமுழுக்கு பெருவிழாவில்

கலந்து கொண்டு சிறப்பிப்பவர்கள்

மாண்புமிகு. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

திரு.**பி.கே.சேகர்பாபு** அவர்கள்

மாண்புமிகு. தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர்

திருமதி.**கனிமொழி** அவர்கள்

மாண்புமிகு. மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்

திரு.**அனிதா இராதாகிருஷ்ணன்** அவர்கள்

மாண்புமிகு. ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர்

திரு.**M.C.சண்முகையா** அவர்கள்

மாண்புமிகு. திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர்

திரு.**ஊர்வசி.செ.அமிர்தராஜ்** அவர்கள்

கும்பாபிஷேக வைபவத்தில் எழுந்தருளும் ஆன்மீகச் சான்றோர்கள்

தருமபுர ஆதீனம் 27வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

திருப்பனந்தாள் காசித்திருமடத்து அதிபர்

கயிலை, மாமுனிவர்

காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்

திருவாவடுதுறை ஆதீனம் 24வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவான தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

கூனம்பட்டி கல்யாணபுரி ஆதீனம் 57வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ராஜசரவண மாணிக்கவாசக சுவாமிகள்

குன்றக்குடி ஆதீனம் 46வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

பெருங்குளம் செங்கோல் ஆதீனம் திருமடம்

103வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமாச்சார்ய சுவாமிகள்

மதுரை ஆதீனம் 293வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர தேசிக ஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

குருக்கள்பாளையம் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ ஆலால சுந்தர பண்டித குரு சுவாமிகள், மருதுரை

உ

சிவமயம்

புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்

பேரன்புடையீர்.!

எல்லாம் வல்ல இறைவன் இறைவியியின் திருவருளாலும், குருவின் அருளினாலும், **பெருங்குளம் செங்கோல் ஆதீனம் 103வது குருமஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமாச்சார்ய சுவாமிகள்** அருளாசியுடன், நாளது நிகழும் மங்களகரமான கொல்லம் 1200ம் ஆண்டு விஸ்வாவசு வருடம் **வைகாசி மாதம்25ம் தேதி (08 06 2025) ஞாயிற்றுக்கிழமையும்,** சுக்லபட்ச த்ரையோதசி திதியும், ஸ்வாதி நட்சத்திரமும், சித்தயோகமும் பூரண ஜீவன்நேத்ரமும் ஸாத்வீக வேளையும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை 7.15 மணி முதல் 8.30 மணிக்குள் மிதுனம் லக்னத்தில்,

பழம்பெரும் சிவாலயங்களில் ஒன்றான தென்சிதம்பரம் என்று போற்றப்படும், தூத்துக்குடி மாவட்டம் **செய்துங்கநல்லூர் அருள்மிகு சிவகாமி அம்பாள் உடனுறை ஸ்ரீ பதஞ்சலி வியாக்ரபாதீஸ்வரர் தென்திலை நடராஜபெருமான்** மற்றும் பரிவார தெய்வங்களுக்கு **புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகமானது** வெகு விமரிசையாக நடைபெற உள்ளது. அதுசமயம் ஆன்மீக மெய்யன் பர்கள், அடியார் பெருமக்கள் மற்றும் பக்த பெருமக்கள் அனைவரும தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து எல்லாம் வல்ல இறைவன் இறைவியின் பேரருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நாள் / நேரம்	விபரம்
வைகாசி 22ம் தேதி 05.06.2025 வியாழக்கிழமை	
அதிகாலை 4.30 மணிக்கு மேல்	மங்கல இசை, திருமுறை பாராயணம், அனுக்ஞை, விக்னேஷ்வர பூஜை, புன்யாகவாசனம், வேதிகார்ச்சனை, வேதபாராயணம், கணபதி ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை
காலை 8.30 மணி முதல்	பூர்வாங்க பூஜைகள் ஆரம்பம், சாந்தி ஹோமம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், தீபாராதனை.
மாலை 5.00 மணிக்கு மேல்	வாஸ்து சாந்தி, பிரவேச பலி, பூர்வாங்க பூஜைகள், தீபாராதனை
வைகாசி 23ம் தேதி 06.06.2025 வெள்ளிக்கிழமை	
காலை 6.00 மணி முதல்	மங்கல இசை, திருமுறை பாராயணம், மஹாலெட்சுமி ஹோமம், கோபூஜை, தீபாராதனை
காலை 8.00 மணி முதல்	சுதர்ஸன ஹோமம், மிருத்யுஞ்ஜய ஹோமம், நவக்ரஹ ஹோமம், கன்யா பூஜை, சுமங்கலி பூஜை(பெண் பக்தர்களுக்கு சுமங்கலிப் பிரசாதம் வழங்கப்படும்) தீபாராதனை
மாலை 3.00 மணிக்கு மேல்	தீர்த்தலங்கிரஹனம் (கருங்குளம் புனித தாமிரபரணி நதியிலிருநது தீர்த்தம் எடுத்து வருதல்) ம்ருத்ஸங்கிரஹனம், அங்குரார்ப்பனம் தொடர்ந்து ஆச்சார்யவர்ணம், எஜமான வர்ணம், ரஷாபந்தனம், கும்பலங்காரம்
இரவு 7.32மணிக்கு மேல்	கலாகர்ஷனம், கடம் யாகசாலை பிரவேசம், முதற்கால யாகசாலை பூஜைகள், வேதிகார்ச்சனை, வேதபாராயணம், திருமுறை பாராயணம் திரவ்யாகுதி, பூர்ணாகுதி தீபாராதனை.

உ

சிவமயம்

நாள் / நேரம்	விபரம்
வைகாசி 24ம் தேதி 07.06.2025 சனிக்கிழமை	
காலை 6.00 மணிக்கு மேல்	மங்கல இசை, திருமுறை பாராயணம்,
காலை 8.00 மணிக்கு மேல்	விசேஷ சந்தி (செய்துங்கநல்லூர் அருள்மிகு ஸ்ரீ ரெங்கநாத பெருமாள் திருக்கோவில்) தொடர்ந்து இரண்டாம் கால யாகசாலை பூஜைகள் ஆரம்பம். வேதிகார்ச்சனை, வேதபாராயணம், திவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை
மாலை 4.00 மணிக்கு மேல்	மங்கல இசை, திருமுறை பாராயணம்
மாலை 5.00 மணிக்கு மேல்	விசேஷ சந்தி (செய்துங்கநல்லூர் அருள்மிகு ஸ்ரீ திருவரங்கச்செல்வி அம்பாள் திருக்கோவில்) தொடர்ந்து மூன்றாம் கால யாகசாலை பூஜைகள் ஆரம்பம், வேதிகார்ச்சனை, வேதபாராயணம், திரவ்யாகுதி பூர்ணாகுதி, தீபாராதனை,
வைகாசி 25ம் தேதி 08.06.2025 ஞாயிற்றுக்கிழமை	
அதிகாலை 4.30 மணிக்கு மேல்	மங்கல இசை, திருமுறை பாராயணம், தொடர்ந்து நான்காம் கால யாகசாலை பூஜைகள் ஆரம்பம். வேதபாராயணம்
காலை 6.30 மணிக்கு	ஸ்பர்சாகுதி, திரவ்யாகுதி, மஹா பூர்ணாகுதி, தீபாராதனை
காலை 7.15 மணிக்கு	யாத்ரா தானம், கடம் புறப்பாடு.
காலை 7.15 மணி முதல் 8.30 மணிக்குள் மிதுன லக்னத்தில்	அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ பதஞ்சலி வியாக்ரபாதீஸ்வரர் தென்தில்லை நடராஜ பெருமான் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.
காலை 11.00 மணிக்கு மேல்	மஹா அபிஷேகம் (பால், பஞ்சாமிர்தம், பன்னீர், சந்தனம் முதலிய நறுமன பொருள்களால் அபிஷேகம் நடைபெறும்) தொடர்ந்து மஹா தீபாராதனை.
மாலை 4.30-6.00 மணிக்குள்	பிரதோஷ வழிபாடு.
மாலை 6.00 மணிக்கு மேல்	அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ பதஞ்சலி வியாக்ரபாதீஸ்வரர் திருக்கல்யாண வைபவம் நடைபெறும்.
இரவு 8.00 மணிக்கு மேல்	பள்ளியறை பூஜை, பைரவர் பூஜை நடைபெறும் திருச்சிற்றம்பலம்.

மண்டல பூஜை :

வைகாசி 26ம் தேதி 09.06.2025 திங்கட்கிழமை முதல் தினமும் காலை 10.00 மணிக்கு மேல் மண்டல பூஜை நடைபெறும்

உ

சிவமயம்

கும்பாபிஷேக பூஜைகளை ஆகம முறைப்படி நடத்தித் தருபவர்கள்

விகாஸ் ரத்னா, சிவாகமச் செம்மல்

சிவஸ்ரீ, டாக்டர்.**பிச்சை குருக்கள்** அவர்கள்

முதல்வர், கற்பக விநாயக வேத சிவாகம பாடசாலை, சிவநெறிக் கழகம், பிள்ளையார்பட்டி

அவர்களின் அருளாசியுடன்..

உயர்திரு.**இரா.வெங்கடாசலம் வாத்தியார்** அவர்கள்

கருங்குளம்

தூத்துக்குடி மாவட்டம். செல் : **9750646592**

உயர்திரு.**வெ.பாலசுப்பிரமணிய வாத்தியார்** அவர்கள்

அர்ச்சகர். அ/மி, உச்சிஷ்டகணபதி திருக்கோவில், மணிமூர்த்தீஸ்வரம்,

திருநெல்வேலி (கருங்குளம்)

உயர்திரு.**வெ.முத்துராமன்** அவர்கள்

ஆலய அர்ச்சகர். (கருங்குளம்) செல் : 8138055143

திருப்பணி மற்றும் கும்பாபிஷேகத்தை சிறப்பித்த சேவகர்கள்

தேவாரம் ஓதுவார்கள் :	திரு.**செல்லப்பா** அவர்கள், சேரன்மகாதேவி. திரு.**ராஜமணி** அவர்கள், செப்பறை, திரு.**சங்கரன்** அவர்கள், செய்துங்கநல்லூர்
மிருதங்கம் :	திரு.**மணி** அவர்கள், பாளையங்கோட்டை
திருக்கோவில் புஷ்ப அலங்காரம் :	திரு.**பெருமாள்** அவர்கள், செய்துங்கநல்லூர்
ஒலி,ஒளி அமைப்பு :	திரு.**ராமலிங்கம்** (முனீஸ் சவுண்ட்ஸ்)அவர்கள், செய்துங்கநல்லூர்
பந்தல் அமைப்பு :	திரு.**தர்மன்**அவர்கள், மூலக்கரை
நாதஸ்வரம், மேளம் :	நாதஸ்வர நற்குணச் செம்மல் திரு.**பாலு& குழுவினர்** அவர்கள், சேரன்மகாதேவி
பஞ்சவாத்தியம் :	திரு.**செந்தில் கம்பர் குழுவினர்** , பாளையங்கோட்டை
வானவேடிக்கை :	திரு.**ரமேஷ்** அவர்கள், புளியங்குளம்
யாகசாலை பிரசாதம் :	திரு.**திருப்பதி** அவர்கள், சமையல் மாஸ்டர், செய்துங்கநல்லூர்
மகேஸ்வர பூஜை :	திரு.**சங்கரநாராயணன்** அவர்கள்,சமையல் மாஸ்டர், அனவரதநல்லூர்
திருமதில் மற்றும் கல் தூண்களில் சுண்ணாம்பு காரைகளை அகற்றும் பணி :	திரு.**சந்திரன்**அவர்கள், கோவில்பட்டி
கல்படி அமைத்தல், தளவரிசை கல் பதித்தல் :	திரு.**முத்து ஸ்டோன் ஒர்க்ஸ்**, மயிலாடி
கோபுரங்கள் சுதை வேலை மற்றும் பஞ்சவர்ணம் அடித்தல் :	திரு.**மணிகண்டன்**அவர்கள், புல்லுக்காட்டுவலசை
சேர், டேபுள், சமையல் பாத்திரம் :	திரு.**அழகுமுத்து** அவர்கள், செய்துங்கநல்லூர்
போட்டோ வீடியோ :	திரு.**வள்ளுவன் கலையகம்**அவர்கள், செய்துங்கநல்லூர்.
யாகசாலை அலங்காரம் :	திரு.**உலகநாதன்(எ)துரை** அவர்கள், அய்யனார்குளம்பட்டி

அழைப்பின் மகிழ்வில்..

கயிலாய வாத்தியம் அடியார்கள்,
ஓதுவார் மூர்த்திகள்,
உழவாரப்பணி சிவனடியார்கள்,
அனைத்து திருவிழா மண்டகப்படிதாரர்கள்,
மற்றும் பதஞ்சலி வியாக்ரபாதீஸ்வரர் ஆன்மீகப் பேரவை
செய்துங்கநல்லூர் & வி.கோவில்பத்து